

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை வீதி
கொக்குவில் மேற்கை சேர்ந்த

அமரர் கிருஷ்ணபிள்ளை செல்வராணி

அவர்களின்

# நினைவு மலர்

26.03.2008

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை வீதி
கொக்குவில் மேற்கை சேர்ந்த

# அமரர் கிருஷ்ணபிள்ளை செல்வராணி
அவர்களின்

# நினைவு மலர்

26.03.2008

# உள்ளடக்கம்


1. முகப்பு
2. வாழ்வுச்சரிதை
3. தேவாரம்
4. அஞ்சலியுரைகள்
5. மருத்துவக் கட்டுரை
6. பக்திப் பாடல்கள்
7. கடவுள் தந்த அழகிய வாழ்வு. (படங்களின் தொகுப்பு)
8. நன்றியுரை

உ
சிவமயம்

| மண்ணில் |  | விண்ணில் |
|---|---|---|
| 29 | | 25 |
| 12 | | 02 |
| 1943 | | 2008 |

## அமரர். கிருஷ்ணபிள்ளை - செல்வராணி

(இளைப்பாறிய ஆசிரியை)
கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி
யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம்
கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை.

ஆசைகொள் வாழ்வில் அவனி சிறக்கவென
நேசித்து வாழ்ந்த நிர்மலத்தாள் - செல்வராணி
மாசிமாதத்து வந்த அபர பஞ்சமியில் பூ
தேசத்தை நீத்தாள் சிரித்து

கலியுகம் நடக்கும் காலம்சர்வ சித்தாண்டு
குளிர்பனி மாசிக் கூதலில் - வலம்வரும்
முழுநிலவு கழிந்து முன்வந்த பஞ்சமியில்
உலகினை நீத்தார் உயர்ந்து.

# நினைவு மலர்

26.03.2008

# அமரர் செல்வராணி கிருஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்.

இலங்கையின் சிரசாய் அமைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொக்குவில், தாவடி என்பன கலை, கல்வி, பண்பாட்டில் சிறந்த தமிழும் சைவமும், மணக்கும் இரு சிறு கிராமங்களாகும். இவை இரண்டும் அயற்கிராமங்களாக அமைந்துள்ளன. கொக்குவில் மேற்கை சேர்ந்த ஐயாத்துரை இரத்தினம்மாவின் மூத்தபுதல்வியாக பரமேஸ்வரி அவதரித்தார். பரமேஸ்வரியின் சகோதரர்களாக காராளபிள்ளையும், சேனாதிராசாவும் உதித்தனர். பரமேஸ்வரி அவர்கள் தாவடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வநாயகம் (செல்லத்துரை) அவர்களைக் கைப்பிடித்தார். செல்வநாயகம் பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியாக 29 - 12-1943 இல் கொக்குவிலில் உதித்தார் அமரர் செல்வராணி அவர்கள். இவரின் சகோதரர்களாக பாலச்சந்திரன், சிவச்சந்திரன் (சிவனேசு) சிவராணி (தயா) என்போர் பிறந்தனர்.

மூத்த புதல்வியான இவர் தாய்தந்தையாரால் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டார். இவர் தமது ஆரம்பக் கல்வியை கொக்குவில் CCT.M.S பாடசாலையில் பயின்றார். சிறு வயதிலிருந்து துடிப்பும் விவேகமுமுள்ள பிள்ளையாக விளங்கினார். அவர் தமது இடைநிலைக்கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியில் பெற்றார். இங்கு பயின்று க.பொ.த (சா. த) க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடைந்தார். பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைக்காததால் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் 4 வருட வர்த்தக டிப்ளோமா பாடநெறியைப் பயின்று வர்த்தகப் பட்டதாரியானார். க. பொ. த (உ.த) பரீட்சையில் தமிழ், பொருளியல் உட்பட பாடங்களில் சித்தியடைந்ததால் கலைப்பாடங்களிலும் வர்த்தக பாடங்களிலும் வல்லவராக விளங்கினார். தொழிநுட்பக்கல்லூரியில் பயின்றகாலத்தில் சகபாடிகளான சிறுப்பிட்டிக்கந்தசாமி யாழ்ப்பாணம் கமலேஸ்வரி, வேதநாயகி, ரகுநாதன், சரோசா, இராஜேஸ்வரி என்பவர்களின் நட்பு வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தது.

இவர்களின் நட்பு கல்லூரியுடன் முடிவடையாமல் சுக துக்கங்களில் பங்கு கொள்வது, ஆலோசனைகள், அறிவுரைகள் பெறுவது, ஆறுதல்சொல்வது போன்ற பல விடயங்களில் வாழ்வின் ஊன்றுகோலாக விளங்கியது. இவர்களின் நாலுவருட பாடநெறி 1976ல் நிறைவுற்றது.

யாழ் தொழிநுட்ப கல்லூரிக்கு செல்வதற்கு முன்பதாக இரத்தினம் இரத்தின கோபால் அவர்கள் நடத்திய ஞானக்குழந்தை இல்ல பாலர்பாடசாலையில் ஆரம்பஆசிரியராக பணிபுரிந்தார். இதன் பின் இரண்டு வருடங்கள் வேலணை மத்திய கல்லூரியில் பகுதி நேரஆசிரியராக கடமையாற்றினார். இக்காலக்கட்டத்தில் இவர் தன் தந்தையாரை இழந்தார். தந்தையார் நோயுற்றபோதும் மறைவின் பின்பும் இவரது சகோதரர் பாலச்சந்திரன் குடும்பச்சுமையை தாங்கினார். இதனால் அவர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் சிறப்பாக பயின்றபோதும் பல்கலைக்கழகம் செல்லாது கொழும்பு மாநகர சபையின் படவரைஞராக கடமையேற்றார். அமரர் செல்வராணி அவர்கள் வீட்டில் நோயுற்ற தந்தையை கவனிப்பதுடன் கொக்குவில் தொழினுட்பகல்லூரியில் வர்த்தக பாடங்களில் பகுதிநேர ஆசிரியராக கடமையாற்றினார். வேலணை மத்திய கல்லூரியில் பகுதிநேர ஆசிரியராக கடமையாற்றிய போது அதிபர் குணசிங்கத்தின் நன்மதிப்பைப் பெற்றார். அவரின் நற்போதனைகளை வாழ்வில் ஆதார சுருதியாக கொண்டார்.

மட்டுவில் தெற்கு வல்லிபுரம் - வள்ளியம்மையின் நான்காவது புதல்வராக பிறந்த யான் இக்காலகட்டத்தில் கொழும்பு நில அளவை திணைக்களத்தில் தட்டெழுத்தாளராக கடமையாற்றி கொண்டிருந்தேன். அமரரின் தம்பி பாலச்சந்திரன் திருமணம் பேசி வந்தார். பேசி ஒரு வாரகாலத்திலேயே திருமணம் நிச்சயமாகி 04 -09-1978ல் திருமணம் நடைப்பெற்றது.

1979 ஜூலை 24ம் திகதி ஒரு ஆண் மகனைப்பெற்றார். யாழ்ப்பாணம் ஞானம் என்ற எண் சோதிடரின் அறிவுரைப்படி மகனுக்கு குருபரன் என்ற நாமம் சூட்டினார்.

மகன் பிறந்து ஒன்பது மாதகாலத்தில் கொழும்பு நில அளவை திணைக்களத்தில் கடன் சபையில் கணக்குப் பதிவாளராக கடமையேற்றார். இக்காலத்தில் மகனை அவரது தாயாரினதும் தங்கையாரினதும் பொறுப்பில் விட்டு கடமைநிமித்தம் வெள்ளவத்தை இராஜசிங்கா வீதியில் அறையெடுத்து தங்கினோம். இன்று வெள்ளவத்தை இராஜசிங்கா வீதி முகப்பு கடலில் அவர் அஸ்தி கரைக்கும் போது வாழ்க்கை தடயம் தொடர்பு என் நெஞ்சை பிளந்தது. இராஜசிங்கா வீதியில் அறை நண்பராக இருந்த பவளநாதன் அவர்களுக்கும் எமது திருமண திகதியிலேயே திருமணம் நடந்தது. கொழும்பில் அவர் வாழ்ந்த காலத்தில் எனது அறை நண்பர்களான பவளநாதன், ஸ்ரீதரசர்மா, சண்முகலிங்கம் ஆகியோரையும் அவர்களின் குடும்பத்தினரையும் தன் குடும்பம் போல கொண்டாடினார்.

1981ல் பட்டதாரிஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்று கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் ஒன்பது வருடங்கள் கடமையாற்றினார். இக்காலக்கட்டத்தில் மத்யூ என்ற அதிபரினதும் உபஅதிபரினதும் நன்மதிப்புக்கு பாத்திரமானார். கல்முனை நொத்தாரிசு நண்பியானார். மீனா, சுவேன் ஆகிய ஆசிரியர்களின் தோழியானார். கல்முனை கணேசன் ஸ்டோர்ஸ் நடராஜா குடும்பத்துடன் தங்கினார். இவர்கள் கொக்குவிலில் எமது வீட்டு அயலவர் ஆவார்.

கல்முனையில் கடமையாற்றிய போது யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் மூலமாக ஹபரணை மன்னம்பிட்டி, கல்ஓயா போன்ற சிக்கல் நிறைந்த வழிதடங்கள் ஊடாக பல தடவைகள் பயணம் செய்யவேண்டி ஏற்பட்டது. யாழ்பாணத்துக்கான இடமாற்றம் தாமதமாக கிடைத்ததால் தனது மகனுடன் ஒன்றாய் வாழும் திறை குறைந்தது. குழந்தை பாசமும் பிரிவுத் துயரும் அவரை வாட்டியது.

1991ல் இடமாற்றலாகி யாழ் பெரியபுலம் மகாவித்தியாலத்தில் ஆசிரியரானார். இரண்டு வருடங்கள் நிறைவு செய்து பின்னர் தனது வீட்டுக்கு அருகே உள்ள கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை ஆசிரியராக பொறுப்பேற்றார்.

இளைப்பாறும் வரை அந்த பாடசாலையிலேயே கடமையாற்றினார். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய காலக்கட்டத்தில் பாடசாலை அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் மதிப்புடன் பாராட்டு பெற்றார். பல ஆசிரியர்கள் இவரின் குடும்ப நண்பர்கள் ஆகினார்கள். இளைப்பாறிய பின்னரும் தம் பாடசாலை வைபவங்களுக்கு அழைத்து சிறப்பித்தார்கள். இதனால் இளைப்பாறியபின் ஏற்படக்கூடிய வெறுமை உணர்வோ, சோர்வோ ஏற்படவில்லை.

இவர் வாழ்வின் நோய் அதிகம் வாட்டவில்லை. இறப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் செங்கண்மாரி நோயால் பீடிக்கப்பட்டு ஏறத்தாழ நான்கு கிழமைகள் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றார். 2006 செப்டம்பர் மாதத்தில் பாரிச வாத நோய் தாக்கியபோதும் ஒரு வார காலத்தில் முழுமையாக குணமடைந்தார். கடந்தவருட இறுதியில் ஏற்பட்ட மூச்சிரைப்பு நோய் அவரை நடமாடும் தன்மையுடன் கூடிய நோயாளியாக்கியது. நோயின் கடுமை அதிகரித்து பெப்ரவரி 11ம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பெப்ரவரி 22ம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அப்போது கூட மகன் சகோதரன், உறவினர்களுடன் நன்கு உரையாடினார். 24ம் திகதி நோயின் கடுமை அதிகரிக்கவே மருத்துவ அதிதீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டு 25-02-2008 இரவு 11.30 அளவில் எம்மை எல்லாம் தவிக்க விட்டு இறைவன் திருவடியை அடைந்தார். “இஞ்சரப்பா” என்று அன்புடன் ஒலித்த ஒலி ஓய்ந்து விட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**வ. கிருஷ்ணபிள்ளை**
**கணவர்.**

# பஞ்சபுராணம்

## தேவாரம்

### விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

தலம் : திருவலிவலம் பண் : வியாழக்குறிஞ்சி

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வழி வலமுறை இறையே.

தலம் : திருக்கேதீஸ்வரம் பண் : நட்டபாடை

பாடல் வீணையர் பல பல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட
நஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடில்லாத் கேதீச்சரம் கைதொழ
கெடுமிடர் வினைதானே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைந் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயை
தொண்டனேன் விளம்மா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டியழுதிட
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மனனிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்அடியின் கீழ் இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வா(அ)ழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழக
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி
தேசன்னடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன்அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கண் ணுதலான் தன் கருனைக்கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மணிணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுர ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண் இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி
மெய்ஞானான ஆகிமிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்நின தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோறும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்து அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்து அருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா வான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்

நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாதநுண் உணர்வாய்

மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறேவந்து அறிவோம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண்ணர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பி உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா! அரனேயோ! என்று என்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாரமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



# யாழ். பாலர் கல்விக் கழகத்தினரின் அஞ்சலியுரை

தீயினாலோ, வெள்ளித்தணலாலோ, காற்றினாலோ அல்லது வேறு ஏதாவது ஒன்றினாலோ அழிக்க முடியாத ஓர் அரும் பெருஞ் சொத்தான கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட எமது பாலர் கல்விக் கழகத்தின் ஆரம்ப காலத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றியவர் மறைந்த எமது அன்புக்குரிய திருமதி செல்வராாணி கிருஷ்ணபிள்ளை ஆவார்.

அவரது அளப்பரிய ஆசிரிய சேவையினால் அறிவு பெற்றுயர்ந்தவர்கள் அநேகம் பேருளர் எனக் கூறின் மிகையாகாது. தன்னலமற்ற பொதுச் சேவைக்குத் தன்னையே அர்ப்பணித்து அரும் பணியாற்றியவரான இவரது இழப்பு ஒரு பேரிழப்பாகும். ஈடு செய்ய முடியாத இழப்பினால் ஆறாத்துயரத்தில் ஆழ்ந்துள்ள எமது கழகப் போஷர்கர் திரு. வ. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும் மகன் குருபரனுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மறைந்த எமது கழக ஸ்தாபகர் திரு. இரட்ணகோபால் அவர்களுடன் இணைந்து கழகத்தின் செயற்பாடுகளில் ஒத்துழைப்பு நல்கிப் பாடுபட்டவர் திருமதி செல்வராணி அவர்கள்.

அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்து வணங்கி எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**ஞானக் குழந்தை இல்ல**
**பாலர் கல்விக்கழக சமூகத்தினர்**
**08. 03.2008**

# அமரர் செல்வராணி கிருஷ்ணபிள்ளை

எப்போதும் சிரித்த முகத்துடன் அன்பாகவும், பண்பாகவும் பழகும் இயல்புடையவர் சக ஆசிரியர்களது சுகதுக்கங்களில் பங்குபற்றும் நற்பழக்கம் கைவரப் பெற்றவர்.துயர்படிந்த முகங்களைக் கண்டால்உடனே ஆர்வத்துடன், சகோதர பாங்குடன்அணுகி, ஆறுதலும், அறிவுரைகளும் வழங்குவதில் வல்லவர்.

"வணிகக் கல்வியுகும் கணக்கீடும்" என்ற பாடத்தில் தேர்ச்சி பெற்றவர்! சிக்கலான விடயங்களை பகுதிகளை மிக எளிமையான முறையில் விளக்கும் கற்பித்தற் சிறப்பினாலும் அன்புடன் பழகும் இனிய பண்பினாலும் எமது பாடசாலை மாணவர் மனதில் இடம் பிடித்தவர்.

இவரது மறைவு துயர்தரினும் இவரது நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றென்றும் பசுமையாகப் படர்ந்திருக்கும்.

பாடசாலைச் சமூகம்
( யா / பெரியபுலம் ம.வி )

# அமரர் இறுதியாக கடமையாற்றிய பாடசாலை சமூகத்தின் இரங்கல்

எமது அன்பிற்கும் விருப்பத்திற்குரிய செல்வராணி ரீச்சர் இன்று எம்மிடையே இல்லையே என்ற எண்ணம் நெஞ்சத்தை நெருட, அவர் எமது வித்தியாசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தை நினைக்கின்றோம். கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்ட அவர் அனைவரதும் அன்பிற்கும் பாத்திரமானவர். தன்னடக்கம் கொண்ட இவர் மனதிலே பட்டதை ஒளிவு மறைவின்றி கூறி விடுவார் தன்னோடு கற்பித்த சக ஆசிரியர்களோடும் மிக நெருங்கிய நட்புறவைப் பேணி வந்தார். இவர் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பும் உறவுகள் ஒரு தொடர்கதையானது தனது ஓய்வு காலத்திலும் அடிக்கடி பாடசாலைக்கு வருகைதந்து ஆசிரியர்களது சுக நலங்களை விசாரித்துக் கொள்வார் அத்துடன் மாணவர்களது முன்னேற்றம் தொடர்பாகவும் அக்கறையுடன் விசாரிப்பார். எமது பாடசாலை செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவராக பல வழிகளிலும் உதவி புரிந்துள்ளார். தனது ஏக புத்திரனின் பிறந்த நாளை எங்களுடன் சேர்ந்து கொண்டாடுவதில் அவருக்கு பரமதிருப்தி. கட்டாயம் நேநீர் விருந்துபசாரம் காத்திருக்கும். அவரைக் காணும் நேரங்களில் எமது குறை நிறைகளை கூறிக் கொள்வோம். அந்த நேரத்தில் அன்புடன் அவர் கூறும் ஆறுதல் மொழிகள் எமது மனச் சுமைக்கு மருந்தாக அமையும்.

பிறர் பிள்ளை தலைதடவ தன்பிள்ளை தானே வளரும் என் பார்களே அது போலவே அவர் பிறர் பிள்ளைகளை தன் பிள்ளை போல அரவணைத்து அறிவூட்டியதை நாம் அறிவோம். பிள்ளைகளின் ஒழுக்கசீலர்களாக இருக்க வேண்டும் எண்ணுவதிலும் அக்கறை கொண்டு செயற்பட்டவர்.

தனது அறிவுரைகள் மூலம் மாணவரை ஆற்றுப்படுத்திவந்தார். இவரதுஇழப்பு மாணவர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த நேரத்தில் என்றோ முடிந்த முடிவு என்று ஆறுதல் அடைவதைத் தவிர வேறு வழியில்லை. அவரது ஆத்மா இறைவனது பாதவிந்தங்களில் சரணாகதியடைய பிரீத்திக்கின்றோம்.

**கொக்குவில் ஞானபண்டிதவித்தியாலயம்**
**பாடசாலை ஆசிரியர்கள்**

# அன்பின் மறு பெயர்தான் என் செல்வராணி

எங்கோ பிறந்து வளர்ந்து எங்கோ படித்து எங்கெங்கோ வேலை செய்து இறுதியாக யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலைக்கு நான் கடமையின் நிமித்தம் வந்தேன். வந்து சில காலங்களின் பின் 1991 ஆம் வருடம் திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வராணி என்னும் ஓர் ஆசிரியை எனது பாடசாலைக்கு மாற்றலாகி வந்தார். அவரைச் சந்தித்தேன் கதைத்தேன் .என் மனதை அவரிடம் பறிகொடுத்தேன். நாளாக நாளாக அவர் பாடசாலைக்கு வரவில்லையென்றால் என்மனம் ஏனோ சோர்வடைந்து விடும். காலப்போக்கில் நெருங்கிய சினேகிதிகளானோம். ஒருவருடன் ஒருவர் மனம் திறந்து எங்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டோம் 15.06.91 முதல் 10.02.2008 வரை. அன்றும் இருவரும் விழிநீர் சொரிய யாழ் மருத்துவ மனையில் இருந்து **Teacher** போய் வருகிறேன் எனச் சொல்லிவிட்டு வந்தேன். அன்றுதான் நான் உங்களைக் காணும் கடைசி நாள் என்று எனக்குத் தெரியவில்லையே.

உங்கள் நல்ல மனதை, நேர்மையை, தயாளகுணத்தை, துணிவை, பிறருக்கு உதவி செய்யும் மேலான பண்பை இன்றும் எண்ணிப் பார்க்கிறேன். பேராசை, சினம், கோபம், பொறாமை என்பதே தெரியாமல் இருந்தீர்களே. எமது பாடசாலையில் கடமைபுரிந்த காலங்களில் மட்டுமல்ல ஓய்வு பெற்ற பின்னும் கூட பாடசாலையின் கணக்குகளை மிக திறமையாக சரிபார்த்துச் செய்து கொடுத்தீர்களே. பாடசாலையில் நடைபெறும் விசேட நிகழ்வுகளின் போதெல்லாம் தேவைப்படும் சகல உதவிகளையும் சலிப்பின்றிச் செய்து கொடுத்தீர்களே.

மாணவர்களுக்கு பாடசாலைமட்டம்,கோட்டமட்டமென்றெல்லாம் போட்டிகளுக்குத் தேவையான கட்டுரை, பேச்சுப் போன்ற விடயங்களையெல்லாம் தங்கள் கணவரின் உதவி பெற்றுக் கொணர்ந்து அவர்களை வெற்றிப் பாதையில் கொண்டு சென்றீர்களே. அதுமட்டுமா, சக ஆசிரியர்களுக்கு எப்பெப்ப என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்தீர்களே.

தனிப்பட்ட முறையில் எனக்கு எவ்வளவு ஆறுதலாகவும் ஆதரவாகவும் இருந்தீர்கள். என்னால் எதையுமே மறக்க முடியாமல் தவிக்கின்றேன். நான் ஒரு காலத்தில் கொக்குவில் வந்தால் தங்குவதற்கோர் இடமில்லையே என்று கூறிய போது, "ஏன் நான் இருக்கிறேன். நீங்கள் நேராக என்னிடம் வாருங்கள்" என்று சொன்னீர்களே. இப்போது நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள்? உங்கள் இறுதி நிகழ்வுகளைக் காணக் கொடுத்துவைக்காத பாவிகள். ஆனால் என்னால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்கமுடியவில்லை. நீங்கள் நிஜமாக எங்களோடு வாழ்ந்த பசுமையான நாட்களை எண்ணி மன அமைதி பெற முயற்சிக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வேதவாக்கின்படி வாழ்வாங்கு வாழ்ந்து யாவரினதும் அன்பு நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பெற்றுவிட்டீர்கள்.

நெஞ்சிருக்கும் வரை தங்கள் நினைவு நிறைந்திருக்கும்

சுபம்.

திருமதி. நீ செல்வராஜா
சங்கீத ஆசிரியை

# இது நட்பின் நாட்டமா? காலனின் கலாட்டாவா?

செல்வராணி..... செல்வராணி.... என என்மனைவி அடிக்கடி பேசுவதுண்டு. இருவரும் 1973 இல் இருந்து 1976 வரை நான்கு ஆண்டுகால கற்கைநெறியான வர்த்தக டிப்ளோமா (Diploma -in Commerce) ஐக் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் பூர்த்தி செய்தவர்கள். அன்று தொட்டு அவர்களது நட்பு இடைவிடாது நீடித்தது. அது அவரது பெற்றோர், சகோரர்களுக்கும், என் மனைவியின் பெற்றோர் சகோதரங்களுக்கும் இடையான நட்பாக மாறியது.

இந் நிலையில் செல்வராணிக்கு திருமணம்நடந்தது. ஒரு புத்திரனைப் பெற்றார். என் மனைவி கமலேஸ்வரியும் திருமணம் செய்து கொண்டார். கமலேசும் நானும் முதன்முதலாக அவரின் வீட்டிற்குப் போனபோது திருமதி. கிருஷ்ணபிள்ளை செல்வராணி கணவன் மனைவியாக குழந்தை குருபரனுடன் எம்மை வரவேற்று உபசரித்தமை இன்னும் நீங்காத நினைவுகளாக உள்ளன.

அதன்பின் பலதடவை இரு குடும்பங்களும் ஒருவர் வீட்டிற்கு ஒருவர் சென்று வருவதுண்டு. இரு குடும்பங்களிலும் ஏற்படும் நன்மை தீமைகளில் கலந்து கொள்வதுண்டு. 1995 இடப்பெயர்வைத் தொடர்ந்து எனது குடும்பம் தமிழகம் சென்று விட்டது.

அங்கு சென்னையில் என்மனைவி கமலேஸ்வரி 2005 இல் இறைவடிசேர்ந்தார். அதைத்தொடர்ந்து நான் ஒரே மகளுடன் மீண்டும் இலங்கை வந்தேன். நாம் இலங்கை வந்து சில காலம் கொழும்பில் தங்கி இருந்தோம். இதை அறிந்து செல்வராணி கொழும்பில் நாம் தங்கி இருந்த வீட்டை தேடி வந்து மகளைப் பார்த்துச் சென்றார். அதன் பின் மானிப்பாய்க்குவந்து மகள் தங்கி இருந்த வீட்டைத் தேடி கணவனுடன் சென்று பார்த்தார்.

அத்துடன் விடவில்லை. நாம் எமது யாழ். நகர் வீட்டில் நிரந்தரமாக குடியிருக்க வந்தபின் ஒவ்வொருமாதமும் அங்கு வருவார். கன்னாதிட்டியில் உள்ள வங்கிக்கு வந்து, எமது வீட்டிற்கு வந்து கமலேசின் மகளைப் பார்த்து விட்டு யாழ் வீதியில் உள்ள தனது உறவினர் வீட்டிற்குச் செல்வார்.

யாழ். வீதியில் உள்ள தனது உறவினர் வீட்டிலேயே இயங்கும்" ஞானக்குழந்தை பாலர் பாடசாலையில்" மகளையும் ஆசிரியையாக சேர்த்துக் கொண்டதில் திருப்தி அடைந்தார். தனது சிநேகிதியின் மகள் பாதுகாப்பான ஒரு இடத்தில் வேலைசெய்கிறாள் என்பதில் மகிழ்ச்சி அடைந்தார். தனக்கு மகள் இல்லை என்றகுறையை தனது சிநேகிதியின் மகளின் மேல் அன்புசெலுத்தி தீர்த்துக் கொண்டார். மகளின் எதிர்காலம் பற்றியே அடிக்கடி என்னுடன் பேசுவார்.

அவரது நண்பர்கள் அனைவரும் எனது மனைவிக்கும் நண்பர்கள் என்பதால் அவர்களில்பலரை எனக்கும் தெரிந்திருந்தது. திருமதி செல்வராணி உள்நாட்டிலும், அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் உள்ள நண்பர்களுடன் தொடர்ந்தும் தொடர்புகளை வைத்திருந்தமையால் அவர்களைப்பற்றிய சுகதுக்க செய்திகளை என்னுடனும் பகிர்ந்து கொள்வார்.

இவ்வாறு செல்வராணி - கமலேஸ் இற்கிடையேயான கல்லூரிக்கால நட்பு இருகுடும்பங்களுக்கிடையேயான நட்பாகத் தொடர்கிறது. கடைசியில் நான் அவரை வீதியில் 6 மாதங்களிற்குமுன் கண்ட போது தற்போது ஏன் வீட்டிற்கு வருவதில்லை எனக் கேட்டேன். மகளை உறவினர் வீட்டிற்குப்போகும் போது அடிக்கடி பாலர் பாடசாலையில் பார்க்கிறேன் என்றார்.

அப்போது அவர் சிறிது நடைதளர்ந்து காணப்பட்டார். இருப்பினும் இவ்வளவு விரைவில் அவரைப் பிரியநேரும் என எண்ணவில்லை.

அவர் இறுதி நாட்களில் கொழும்பு வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்டிருந்தபோதும் கமலேசின் மகள் பற்றி விசாரித்திருக்கிறார். எமது மனைவி கமலேஸ்வரி 2005 மார்ச் மாதம் இறைபதம் அடைய, அவரது நண்பி செல்வராணி 2008 பெப்ரவரி யில் அவரைப் பின் தொடர்ந்தார்.

இவரை கமலேஸ்தான் கவர்ந்தாளா?
நட்பு இம்மையிலும் மறுமையிலும் தொடருமா? இது நட்பின் மகிமையா?

**சு. கணேசலிங்கம்**
**ஓய்வுபெற்ற பதில்அதிபர்**
**முதன்மை ஆசிரியர்**
**68, மணிக்கூட்டு வீதி**
**யாழ்ப்பாணம்.**

## அன்புச் சுடர்

அமரர் திருமதி செல்வராணி கிருஷ்ணபிள்ளை அவர்கள் யாழ் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் வர்த்தக டிப்ளோமாப் பட்டதாரி ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றி அங்கிருந்தே ஓய்வும் பெற்றார்.

நான் அங்கு அதிபராக சேவையாற்றிய வேளை அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டியது. அவர் வர்த்தக பாடங்களை மட்டுமன்றி அவருக்க கொடுக்கப்படும் ஏனைய பாடங்களையும் இலகுவழியில் மாணவர்களை தம்வசம் ஈர்த்துக் கற்பித்தமையால் சிறந்த பெறுபேறுகளை பெற்றது மட்டுமன்றி மாணவர்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானார்.

கற்பித்தலுடன் மாத்திரம் நின்றுவிடாது பாடசாலையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னின்று, சக ஆசிரியர்களுடன் ஒரு குழுவாக இணைந்து ஆர்வத்துடன் பணியாற்றினார்.

தன் சகபாடிகளுடன் ஒரு குடும்ப உறுப்பினர் போன்று திறந்தமனதுடன் பழகுவார். அவர்களின் இன்பதுன்பங்களில் உறுதுணையாயிருந்த தவறாது பங்கு கொள்வார்.

நான் அவருடன் பணியாற்றிய காலத்திலும் அதன்பின்பும் என்னுடன் ஒரு பொழுதும் முரண்படாது அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்.

பாடசாலைச் சுற்றாடலை சொந்த இடமாக கொண்டு வசித்தமை பெற்றோருடன் அவரது உறவு மேன்மைபெற உதவிற்று இவ்வாறு அருங்குணங்கள் நிறைந்த ஒரு அன்பரை இனி எப்போரு காண்போம் என் எண்ணும் போது எமது இதயம் விம்மி விம்மித் துடிக்கிறது.

அவர் இறைபக்தி மிக்கவராக எந்நாளும் விபூதியும் பூவும், பொட்டும், நிறைந்தவராகப் பொலிவுடன் தோன்றும் காட்சி என்றென்றும் எமது பாடசாலைச் சமூகத்தினர் உள்ளங்களில் நிலைத்து ஒளிவீசும் இது உண்மை.

" நெருனல் உளணொருவன் இன்றில்லை என்றும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**க. பழனிவேற்பிள்ளை,**
**முன்னாள் அதிபர்,**
**யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை.**
**கொக்குவில்**
**20008. 03. 09**

# நுரையீரல் சிற்றறை அழற்சி

# (Fibrosing alveolitis)

எமது உயிர்வாழ்விற்கு அவசியமான ஒட்சிசன் பெற்றுத்தரும் சுவாச அங்கம் நுரையீரலாகும். நுரையீரலில் ஏற்படக்கூடிய பல நோய் நிலைமைகள் சடுதியான மூச்சுத் திணறலை (ARDS - Acute Respiratory Distress Syndromme) ஏற்படுத்தி உயிரிழப்பிற்கு ஏதுவாகின்றன.

அவ்வாறு நுரையீரலில் ஏற்படக்கூடிய ஒரு அரிதான நோய் நிலைமையே "நுரையீரல் சிற்றறை அழற்சி" (Fibrosing alveolitis) எனப்படுகின்றன. சாதாரணமாக வைரசுக்களாலும் பற்றீரியாக்களினாலும் ஏற்படக்கூடிய அழற்சிக்கும் இதற்குப் உள்ள வேறுபாடுயாதெனில், இங்கு நுரையீரல் சிற்றறைகளின் மெல்லிய இழையங்கள் தடிப்பான நாரிழையத்தினால் (Fibrous tissue) பிரதியிடப்படுவதாகும். இதன் காரணமாக நுரையீரல் சிற்றறைகளிலிருந்து ஒட்சிசன் எமது இரத்தத்திற்கு பரவுதல் தடைப்படுகின்றது. எனவே மூச்சுத்திணறலை உண்டு பண்ணுகின்றது.

இந்நோய் நிலைக்குரிய சரியான காரணம் (Cause) இது வரையில் கண்டறியப்படவில்லை என்றே கூறவேண்டும். ஆனால் Scleroderma, மூட்டுவாதநோய் (Rheumatoid arthritis) ஆகிய நோய்களுடன் அதற்குத் தொடர்பிருப்பதாகக் கண்டறிப்பபட்டுள்ளது. இந்நோய் பொதுவாக அறுபது அல்லது எழுபது வயதுகளிலேயே வெளிகாட்டபடுகிறது. இந்நோயின் தாக்கம் பெண்களை விட ஆண்களில் அதிகமென ஆய்வுகள் கூறுகின்றன.

இந்நோயின் அறிகுறிகளாவன படிப்படியான மூச்சுத்திணறல், இருமல், வேலைகள் செய்வதில் கடுமையான களைப்பு மற்றும் பசியின்மை, நிறைகுறைவு, காய்ச்சல், இயலாமை போன்ற பொதுவான அறிகுறிகள் ஆகும். இந்நோய் உள்ளவர்கள் இலகுவில் அடிக்கடி பல நோய்த் தொற்றுதல்களுக்கும் இலக்காவார்கள். சரியான முறையில் சிகிச்சை அளிக்காவிடின் இதயமும் பாதிக்கப்படும்.

இந்நோயினைக் கண்டுபிடிப்பதற்கு நவீன பிரதிமைத் தொழில் நுட்பம் (Imaging technique) உதவுகிறது. HRCT எனப்படும் High Resolution Computerized Tomogram இதில் முக்கிய பங்குவகிக்கிறது. மற்றும் நுரையீரலிலிருந்து மாதிரியெடுத்து (Lung biopsy) பரிசோதித்தலும் இந்நோயைக் கண்டுபிடிப்பதற்கு உதவுகின்றது.

இந்நோய்க்குச் சிகிச்சை முறையாக தற்பொழுது உயர்ந்தளவிலான ஸ்ரீறோயிட்டு (steroid) பாவனையிலுள்ளது. உதாரணமாக Prednisolone எனப்படும் மருந்தினை கூறமுடியும். இதைவிட கல நச்சு மருந்துகளும் (cyto toxic drugs) பாவனையிலுள்ளன. சில நோயாளர்களில் நுரையீரல் மாற்று சத்திரசிகிச்சை (Lung transplantation) மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இச்சிகிச்சை முறைகளில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணப்படவில்லை.

இன்றைய நவீன யுகத்தில் விஞ்ஞானிகளுக்கும், மருத்துவர்களுக்கும் சவால் விடும் நோய்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது. மேலும் புதிய ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் எதிர்காலத்தில் இந்நோயாளர்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடும்.

**Dr. க. காண்டீபன்**
**கொழும்பு தேசியவைத்தியசாலை.**

# கீர்த்தனை - 01

## கதிர்காமக் கந்தன்

**பல்லவி**

மயில் அகவ விடிகின்ற கதிர்காமம் - கதிர
மலையினிலே வேல்கண்டால் மனம் ஆறும்.

**அனுபல்லவி**

துயில்கின்ற பொழுதெல்லாம் உன்காவலே - விடியல்
துவங்கிடவே கூவுவது உன் சேவலே

**சரணங்கள்**

கதிர்காம முருகா நீ முகங்காட்டிடு - எங்கள்
தலையேறி பழவினைகள் தனை ஓட்டிடு
குறவள்ளி தனைச்சேரும் அழகானவன் - தேவ
குலம்வாழ படைகொண்டு அமர்ந்தானிவன்

அடியாரோ டடியாராய் வாழ்கின்றவன் - சூரன்
அகம்பாலந் தனைப்போக்க வேல்கொண்டவன்
வடிவேலன் அருளாட்சி கதிர்காமத்தில் - அருள
வரவேண்டும் மலர்வாகப் புலர் சாமத்தில்.

## கீர்த்தனை - 02

# நமையாளும் நல்லூரான்

**பல்லவி**

நல்லூரின் புகழ் தென்றல் பாடும் - அந்த
நாதத்தில் மனவூக்கம் கூடும்- (எங்கள்)

**அனுபல்லவி**

கல்லூறும் நீராகும் மனது - அன்பில்
கசிகின்ற போது என் கனவிலுமுன் நினைவு

**சரணங்கள்**

தேரடியின் மகிமையது பெரிது - வானத்
தேவர்க்கும் கிட்டாத சிறப்பு - இது - அரிது
பாரடியில் மணலும் அது வெண்மை - இனி
பற்றிவரும் எம்மிதயம் உன்னை

கேணியதன் காற்றில் சுகம் நூறு - நாம்
கேட்பது எம் சிந்தையிலே அறிவு அதன்சாறு - தண்ட
பாணி நீ கண்ட மெய்ஞ்ஞானம் - அதில்
பாதியாகிலும் தந்தருள வேணும்.

நேரத்தில் வழுவேதும் இல்லை - பூசை
நியமத்தில் தவறேதும் இல்லாத பிள்ளை
கூறுந்தன் மொழியென்ன எமக்கு - உன்
குமிண்சிரிப்பு வழிகாட்டும் நமக்கு!

# கீர்த்தனை - 08
# நல்லூர் முருகன்

**பல்லவி**

அழகென்ற பொருள்கொண்ட அருளாளனே - நல்லூர்
அமர்ந்தெம்மை ஆள்கின்ற மணவாளனே

**அனுபல்லவி**


பொழுதெல்லாம் உனைப்பாடும் வரம் வேண்டுமே - உந்தன்
புகழ்பாடிச் சுகம்காணும் திறன் வேண்டுவேன்.

**சரணங்கள்**

மணிவாயில் திறந்துந்தன் உருக்காட்டினாய் - என்
மனவாயில் புகுந்நதின்று அருள்கூட்டினாய்
அணியாகும் திருக்கேணி அமர்கின்றவன் - தமிழின்
அரும்பாகும் பழனிமலை ஆண்டான் இவன்!

நல்லூரின் மணிகேட்டு யாழ்ப்பாணம் எழும்பும்
நறுமுகையில் தேன்குடித்த வண்டுகளும் அலம்பும்
எல்லோரும் வாழ்வதற்கு எழில்முருகா அருள்தா
என்கவியின் வரிகளிலே நீயுரைவாய் பொருளாய்.

# கீர்த்தனை - 04



## மஞ்சவனப்பதி முருகன் (கொக்குவில்)

**பல்லவி**

கொக்குவிலை விரும்பி வந்தான் குமரன்
குளிர்சோலை மஞ்ச வனப்பதி முருகன்

(இனிய)

**அனுபல்லவி**

தந்தைக்கே பொருள்சொன்ன தலைவன் - அழகு
தமிழுக்கே உயிர்தந்த முருகன்

(அறிவில்)

**சரணங்கள்**

அழகான நந்தவனம் உண்டு அருகில்
அருள்பாயும் திருக்கேணி உண்டு
உலகாள உயர்கோபுரம் உண்டு - உன்
உயிரான தமிழ்மகளும் உறவாக உண்டு

கடம்பமர நிழல்விரும்பும் முருகா - எம்
கதிவினையை தீர்த்துவிட அருள்தா
திடம்பட நம் நெஞ்சினிலே வருவாய்
திருமுருகா அருளிடவா குருவாய்

(கொக்குவிலை)

# வம்சாவழி

ஜயாத்துரை + இரத்தினம்மா

- பரமேஸ்வரி + செல்வநாயகம்
  - **செல்வராணி**
  - பாலச்சந்திரன்
  - சிவச்சந்திரன் (சிவனேசு)
  - சிவ்வராணி (தயா)
- காராளபிள்ளை + இராஜேஸ்வரி
  - கிருபாகரன் (கரன்)
  - கல்யாணி
  - நித்தியகல்யாணி
  - இந்திராணி
  - (கார்த்திகா)
- சேனாதிராசா + தவமணி
  - சாந்தி
  - வசந்தி

செல்வநாயகம் + பரமேஸ்வரி

- **செல்வராணி** + கிருஷ்ணபிள்ளை
  - குருபரன்
- பாலச்சந்திரன் + விமலாதேவி
  - திருபரன்
  - கலைமதி
  - கிருபரன்
- சிவச்சந்திரன் (சிவனேசு) + விஜயகுமாரி
  - சியாமினி
- சிவராணி (தயா) + தனேந்திரன்
  - துரைராஜன் (பார்த்திபன்)
  - சிவபரன்

வல்லிபுரம் + வள்ளியம்மை

| மகேஸ்வரி + பரமசாமி | மாணிக்கவாசகர் + இரத்தினம் | சரஸ்வதி + சோமசுந்தரம் | கிருஷ்ணபிள்ளை + செல்வராணி | துரைராசா (செல்லம்) + ஞானமலர் |
|---|---|---|---|---|
| அருணகிரிநாதன் | கவிதா | சிவசோதி | குருபரன் | சிந்துஜா |
| ஜெயக்குமார் | தயாபரன் | சிவா | | சுதாகரன் |
| சந்திரகுமார் | | முருகதாஸ் | | |
| இலங்கேஸ்வரன் | | வசந்தராசன் | | |
| சூரியபிரபா | | ரோகிணி | | |
| ஸ்ரீஜயன் | | தவராஜா | | |
| ரஜனி | | | | |
| ஜெயந்தி | | | | |
| இரதி | | | | |
| மகேஸ்வரன் | | | | |

# கடவுள் தந்த அழகிய வாழ்வு.



தாயினும் நல்லாள்
தன் தலைவனுடன்



தனது குடும்பத்துடனும் தாய்,
சகோதரி
அம்மம்மா ஆகியோருடனும்.



தனது கணவரின் குடும்பத்துடன்.



கத்தி பிடிக்கக் கற்றுக் கொடுக்கும்
கைகள்



வீடு உடைந்த போதும் விருந்து
வைக்கும் அம்மா (1988)



தனது வீட்டில் தலைவி
2004



E:\march\19\kv\Graphic1.cdr
Wednesday,March19,20085:16:14PM
Plate:4of4

# கடவுள் தந்த அழகிய வாழ்வு.



கொழும்பு காலி முகத்திடலில்
(2006)



கடைசியாக சேர்ந்து பொங்கிய
பொங்கல் (2006)



மகனின் பட்டமளிப்பில்
29-06-2007



"நீ முன்னாலே போ நான் பின்னால் வருவேன்"
தனது தாயின் இறுதிச் சடங்கில் (2006)

# நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வம் அமரர் கிருஷ்ணபிள்ளை செல்வராணி அவர்கள் நோயுற்று யாழ் வைத்திய சாலையில் இருந்த போது அவருக்கு உதவிய மருத்துவர்கள், தாதியர், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும், கொழும்பு பயணத்திற்கு உதவியவர்களுக்கும் குறிப்பாக சென்ஜோன்ஸ் முதலுதவிப் பகுதியின் நோயாளர் காவு வண்டியினர்க்கும் கொழும்பில் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்களுக்கும், ஊழியர்களுக்கும், தோளோடு தோள் நின்ற நண்பர்களுக்கும்,மருத்துவபீட கனிஷ்ட மாணவர்களுக்கும், அன்னாரின் பிரிவின்போது நேரில் வந்து ஆறுதல் சொன்ன அனைவருக்கும், மின்னஞ்சல், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் சொன்னவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள்.

**குடும்பத்தினர்.**



தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது பரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில் – வேண்டா
நமக்கது வழியே நாம்போமளவும்
எமக்கென்ன என்று இட்டுண்டிரும்.